தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, மாசி 1, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 பிப்ரவரி 13, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்."

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாக சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால் அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***39416—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, காரணம்பேட்டை கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லடம் தொகுதி, காரணம்பேட்டை என்ற இடத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்யுமாறு கேட்டிருக்கின்றார். ஆனால், அந்தக் காரணம்பேட்டை பள்ளியில் மாணவர்களுடைய எண்ணிக்கை 26 ஆக உள்ளது. அங்கே கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படுவார்களேயானால் அதனைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழக மக்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.1,000/-ஐ சிறப்புத் தொகையாக வழங்கியதுடன், இன்று அனைத்து தரப்பு மக்களும் பாராட்டுகின்ற வகையில் 2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரியில்லாத நிதிநிலை அறிக்கையாக சமர்ப்பித்து, சமுதாயத்தில் பின்தங்கிய ஏழைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு தலா ரூ.2,000/- வழங்கும் சிறப்புத் திட்டத்தை பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்து, ஏழை எளிய மக்களை மனம் குளிரச் செய்து, அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர், கொங்கு நாட்டுச் சிங்கம் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர், ஜல்லிக்கட்டு நாயகன் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். இங்கே பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களையும் வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதி, கோடாங்கிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட காரணம்பேட்டை என்பது கல் குவாரிகள் நிறைந்த

2019 பிப்ரவரி 13]

பகுதியாகும். அங்கே கல் உடைக்கும் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளனர். காரணம்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் 195 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். அதோடு அதே ஊராட்சியில் உள்ள கோடாங்கிபாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியிலேயும் 105 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். இது தேசிய நெடுஞ்சாலையின் மையப் பகுதியில் உள்ளது. மேலும், அங்கே கல் உடைக்கும் தொழிலாளர்களும், விசைத்தறி தொழிலாளர்களும் நிறைந்திருக்கின்ற காரணத்தினால், அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் உயர் கல்வியைக் கற்க ஏதுவாக, காரணம்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டு, அதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் சரவணாபுரம், கானூர்புதூர், பத்மநாபபுரம், அருள்புரம் உள்ளிட்ட நான்கு இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக கடந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்டன. ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் மற்றொரு மேல்நிலைப் பள்ளிக்கும் இடையில் குறைந்தது 8 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது அரசின் விதி. அதேநேரத்தில் மாணவர்களின் எண்ணிக்கையும் குறிப்பிட்ட அளவு இருக்க வேண்டும். காரணம்பேட்டையில் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக, அதாவது 26 ஆக இருக்கின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் குறைந்தது 50 மாணவர்களாவது அந்தப் பள்ளியில் சேர்வார்களேயானால், அடுத்த ஆண்டு அப்பள்ளியைத் தரமுயர்த்துவது பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

[2019 பிப்ரவரி 13

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரணம்பேட்டைக்கு அருகில் பல மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன என்றும், காரணம்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது என்றும் சொல்லியிருக்கின்றார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய நலன் கருதி, மீண்டும் பரிசீலனை செய்து, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். தமிழகத்தில் ஊராட்சிப் பகுதிகளாக இருந்து பேரூராட்சியாகவும், நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளும், ஊராட்சியாக இருந்து மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளும் இன்னமும் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளாகவே உள்ளன. இதனால் அப்பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஊராட்சி ஒன்றியமும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளும் நிறைவேற்றித் தர முடியாத நிலை உள்ளது. ஆகவே, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளிலே உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் கட்டடங்களைப் பராமரிப்பது, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வது போன்றவற்றை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே செய்து கொடுக்க வேண்டும். அதனால், ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிருவாகத்திடம் ஒப்படைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காரணம்பேட்டை உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இந்தப் பொதுத் தேர்வு முடிந்த பிறகு நீங்கள் மாணவர்களை கூடுதலாக அந்தப் பள்ளியில் சேர்ப்பீர்களேயானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் நலன் கருதி, அரசு அடுத்த ஆண்டு தரமுயர்த்துவது குறித்துப் பரிசீலிக்கும்.*

2019 பிப்ரவரி 13]

அதேநேரத்தில், உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையிலும், ஊராட்சிகள், பேரூராட்சிகள் சிலவற்றை மாநகராட்சியோடு இணைத்திருக்கிறது. அப்படி மாநகராட்சியோடு இணைக்கப்படுகிறபோது, மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதியில் உள்ள பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை மாநகராட்சி செய்து தர வேண்டியிருக்கிறது. இதுசம்பந்தமாக நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசுகிறேன். எந்தெந்தப் பேரூராட்சிகள், எந்தெந்த ஊராட்சிகள் திருப்பூர் மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கு எங்களுடைய துறையும், உள்ளாட்சித் துறையும் சேர்ந்து மாநகராட்சியின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடுத்த கேள்விக்குத்தான் வாய்ப்புக் கேட்டேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, (குறுக்கீடு) நீங்கள் கையைத் தூக்கினீர்கள் என்றால் நான் கூப்பிட வேண்டியதாக இருக்கிறது. பின்னர், நீங்கள் அடுத்த கேள்விக்குத்தான் வாய்ப்புக் கேட்டேன் என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் சுமார் 60 இலட்சம் குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் வழங்கிய அம்மா வழியில் செயல்படும் அற்புத முதல்வர், கொங்குநாட்டுத் தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி)

எனது நன்றியையும், எனது தொகுதி சார்ந்தவர்களின் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவார்கள். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றில் எவ்விதத் தடையுமின்றி ஐயா எடப்பாடியார் அவர்களின் அரசு குழந்தைகளை வளர்ப்பதற்கும், வலிமையான தலைமுறையினரை உருவாக்குவதற்கும், அதிலும் பெண் குழந்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதற்கும் உதவியாக இருக்கிறது. பண்ருட்டி நகரில் உள்ள அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பல கிராமங்களிலிருந்தும் மாணவிகள் வந்து கல்வி பயின்று வருகிறார்கள். அப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகள் 2019-2020 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பையும் அதே பள்ளியில் பயிலும் வகையில், அப்பள்ளியை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஒருபுறத்திலே அடித்தட்டு மக்களுக்கு உயிரோட்டத்தைத் தருகின்ற வகையில், அதாவது ஏழையெளிய மக்களுக்கு தலா 2,000 ரூபாய் வழங்கி ஒரு வரலாற்றைப் படைக்கிற திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற குழந்தைகள் சிறந்த கல்வியைப் பெறவேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. தனியாரை மிஞ்சுகின்ற அளவிற்கு அரசாலே செய்ய முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், L.K.G./U.K.G. போன்ற வகுப்புகளைக் கொண்டுவந்து, தமிழையும், ஆங்கிலத்தையும் சிறந்த முறையிலே கற்றுத் தருவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் அன்றைக்கு துவக்கி வைத்தார்கள். அதைப்போல, பண்ருட்டியைப் பொறுத்தவரையில், பெண்கள்

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அடுத்த ஆண்டில், அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

மின் புதைவடங்கள்

***37580—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, 185-வது வார்டு, பாலவாக்கம், காந்தி நகர் மற்றும் கந்தசாமி நகர் பகுதிகளில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கு அடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய சோழிங்கநல்லூர் தொகுதியில் 185-வது வார்டு, பாலவாக்கம், காந்தி நகர் பகுதிகளில் மின் கம்பிகளை புதைவடத் தடமாக அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*